INTERNATIONAL RESEARCH JOURNAL OF INDIA
ISSN 2454-8707 VOLUME-II,ISSUE-V, JAN-2017

# இராமாயணத்தில் நாட்டியமும், இசையும்

முனைவர். மு.சு. கனகதாரா
நுண்கலைத்துறை அழகப்பாபல்கலைக் கழகம்,காரைக்குடி.



செய்திச்சுருக்கம் :

இந்தியாவைப் பொறுத்தமட்டில் நாட்டியம் என்பதுமிகபழங்காலந் தொட்டுவழக்கிலிருக்கும் ஒருகலைஆகும். இந்நாட்டியத்தின் பூர்வீகம் மிகமிகதொன்மைக்காலத்தில் கண்டறியமுடியாதஅளவில்புதைந்துள்ளதுஎன்றாலும் சிலபுராணகதைகள், இந்துகடவுள்கள் போன்றோர்களுடன் நாட்டியம் சம்பந்தப்பட்டபலசெய்திகளைதருகின்றன. இப்புராணக் கதைகள் போகவேறுசிலஆதாரப்பூர்வமான நூல்கள் வழியாகநாட்டியக் கலையின் பூர்வீகம் பற்றிஅறிந்துகொள்ளவாயப்புகளும் இருக்கின்றன. அதாவது இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகிய இரண்டும்பிரசித்திபெற்றகாப்பியங்கள் என்பதுநாம் அறிந்தவை இதில் இராமாயணம்வாயிலாகநாட்டியக்கலைபற்றியசெய்தியினை இங்குகாணலாம்.

## முன்னுரை :

நாட்டியம் என்பது ஒரு கலை மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த இக்கலை ஒரு நாடு மற்றும் அதன் மக்களின் கலாச்சாரம்,பண்பாடு ஆகியவற்றின் மிக நெருங்கியதொடர்புடையதாகும். மனிதன் தோன்றியபோதேநாட்டியமும் தோன்றியது என்பதில் ஐயம் இல்லைஏனெனில் ஏழைசெல்வந்தர் என்றபாகுபாடின்றிஅனைவரும் பொழுதுபோக்கு சாதனங்களுள் ஒன்றாக இது அமைந்துள்ளது. இந்தியவரலாற்றின் அனைத்து கலைகளுமே ஒரு புனிதமான தொடக்கத்தை கொண்டிருந்தன. மனிதனுள் அமைந்துள்ள அக அழகு அல்லது இறைமையின் வெளிப்பாடாக கலையை கருதும் இந்துக்களின பாணியானது கலையையும் மதத்தையும் ஒன்றுக் கொன்று மிக நெருக்கமானவைகளாக ஆக்கிவிடடது.

இந்தியவரலாற்றில் முதன்மைஆதாரங்களுடன் அறியப்படுகின்றஆரம்பகாலக்கட்டம் வேதகாலம் ஆகும். அந்தவேதகாலத்தில் நாட்டியக் கலைவழக்கில் இருந்ததற்கானஆதாரங்கள் (வேதநுால்கள்) இருக்கின்றன. வேதகாலத்திற்குஅடுத்தப்படியாகவரலாற்றில் இரண்டாவதுமுக்கியமானகாலக்கட்டம் காப்பியக்காலம் ஆகும். இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகிய இரண்டும்பிரசித்திப் பெற்றகாப்பியங்கள் வாயிலாகஅன்றையகாலகட்டத்திய இந்தியஅரசியல்,சமூகபொருளாதாரவாழ்க்கைநிலைகளைஅறியவந்தமையால் அக்காலகட்டத்தை காப்பியக்காலம் எனஅழைக்கப்படுகிறது. இக்காலகட்டத்தில் நாட்டியம் ஒருகலையாகவும்,சமூகவாழ்வில் ஒருமுக்கியஅங்கமாகவும்,பெரும்பான்மைசடங்குகளில் ஓர் இணைப்பாகவும் காணப்பட்டதிற்கானஏராளமானசான்றுகள் காணக்கிடக்கின்றன.

INTERNATIONAL RESEARCH JOURNAL OF INDIA
ISSN 2454-8707 VOLUME-II,ISSUE-V, JAN-2017

இராமயணகாப்பியத்தில் காணப்படும் சிலமுக்கியமானசான்றுகள் :

தசரதமன்னனின் தலைநகரமானஅயோத்திப் பட்டினம் இசைக்கலைஞர்கள், நாட்டியக்கலைஞர்கள் ஆகியோர்களால் மிகபிரகாசமாகவும் பரபரப்பாகவும் காணப்பட்டிருக்கிறது. அயோதியில் நான்குபிரதானமண்டபங்கள் இருந்துள்ளனஅதில் ஒன்றுபெண்கள் நாட்டியமாடுவதற்கென்றேஒதுக்கப்பட்டுள்ளது. அன்றையசமுதாயத்தில் கணிகைஎன்றநாட்டியமங்கைக்குசிறந்தஅந்தஸ்தும்,அப்பெண்ணின் வருகைமங்களகரமானஒன்றாகவும் கருதப்பட்டது. நகரமாந்தர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் சரி,துக்கமாக இருக்கும் போதும் சரிஅதற்குரியநாட்டியங்களை ஆடி வாழ்ந்ததுகுறிப்பிடத்தக்கது.

அயோத்திமாநகரில் இராமபிரான் பிறந்தபோதும்,அவருடையதிருமண விழாவின் போதும் நகரமேதிருவிழாக்கோலம் பூண்டுமகிழ்ச்சியும் ஆராவாரம் பொங்க இசைக்கலைஞர்களையும்,ஆடல் கலைஞர்களையும் வாடகை,ஊதியம் அளித்துசிறந்தநிகழச்சிகள் அமைக்கப்பட்டிருந்தனஎன்றசெய்திகளும் உள்ளன.

தசரதசக்ரவர்த்திமேற்குறிப்பிட்டவிழாக்களுக்கு யஜ்னா தொடங்கும் முன்பாகவேபலரதப்பட்டகலைஞர்களுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் அழைப்புகள் அனுப்பிஉபசரித்துள்ளனர். சக்கரவர்த்தியினுடையவிருந்தினர் பட்டியலில் நட,நந்தகைகணிகைஆகியோர் இடம் பெற்றிருந்ததுகுறிப்பிடத்தக்கது.

வனவாசம் சென்றிருந்த இராமபிரானைதேடிதம்பிபரதன் காட்டிற்குசென்றபோதுபரதரின் வருகையைமுன்னதாகவேஅறிந்திருந்தபரத்துவாஜ முனிவர் பரதனைகௌரவிக்கும் வண்ணம் மாபெரும் வரவேற்பும், சிறந்தவிருந்தும்,மற்றும் ஆரம்பிக்ககேளிக்கைகளுக்கும் ஏற்பாடுசெய்திருந்தான். இதற்காகமிஸ்ரகேசி,புணரிகாமற்றும் புமனாபோன்ற அப்ஸர நாட்டியமங்கைகள் வரவழைக்கப்பட்டுசிறந்தநாட்டியநிகழ்ச்சிகள் நடத்தபட்டன. பரதனைமகிழ்விக்கநாரதமுனிவரேபாடல் பாடியதாகவும் குறிப்புகாணப்படுகிறது. நாட்டியநிகழச்சிகளில் மூழ்கிதிளைத்தபரதனுடையபரிவாரங்கள் தம் பயனத்தைதொடரவோஅல்லதுஅயோத்திநகருக்குதிரும்பவோவிருப்பமில்லாமல் ஆசிரமத்திலேயேநிரந்தரமாகதங்கி இசைநாட்டியநிகழ்ச்சிகளைவாழ்நாள் முழுவதும் கண்டுகளிக்கவேண்டுமென்றுதங்கள் தலைவனிடம் வேண்டிக் கொண்டதாககுறிப்புகள் உள்ளன. நிருத்தம், லயம் போன்றவார்த்தைகள் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. உத்ரகாண்டம் (7.3.44)ல் பாடலுடன் கூடியநாட்டியம் பற்றியும், மூவகை

நாட்டியம் பற்றியும் விவரிக்கிறது. ஒளிபொருந்தியமுகம்,துடிப்பானகைகால் அசைவுதெளிவானபாடல் மற்றும் பலதரப்பட்டஉணர்ச்சிகளைவெளிப்படுத்தும் தன்மைஆகியவைஒருசிறந்தநாட்டியகாரனுடையஅம்சங்கள் என்றுயுத்தகாண்டம் (40.44.45)ல் வரையறுக்கின்றது.

இலங்கைமாமன்னன் இராவணன் ஒருசிறந்த இசைக்கலைஞன். நாட்டியமேதைமற்றும் சிறந்தகலாரசிகன். தினமும் அதிகாலைபடுக்கையில் இருந்துஎழுகின்றசமயத்தில் இசைக்கருவியிலிருந்துமங்களவாத்தியம் ஒலிக்கப்பட

வேண்டும் என்றவழக்கமுடையவர். தன்னுடைய இஷ்ட தெய்வமானசிவபெருமானைவாழ்த்திதாமேபாடியும்,ஆடியும் வழிப்பட்டு இருக்கிறார் இறைவன் சிவபெருமான்,ஆடியுள்ளதாண்டவங்கள் மற்றும் நாட்டியக்கலையில்காணப்படும் நெளிவு, சுழிவுடையமுத்திரைகள் போன்றஅனைத்தையும் தாமேதிறம்படநாட்டியமாடிசாதனைப் படைத்துள்ளார். சீதையைமயக்குவதற்காக இராவணன் கையாண்டவைகளுள் கீதம்,நிருத்தம் மற்றும் வாத்தியம் போன்றவைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இராவணன் தலைசிறந்தவீனைவித்வானும் கூட.

சுக்ரீவனுடையஅரண்மனையில் நுழைந்தலட்சுமணன் அங்குஅரசரே இன்னிசையில் மூழ்கிதம்மைச் சுற்றிப்பாடிஆடிடும் மங்கையர் வசம் மயங்கிகிடந்ததைகண்டதாககிஷ்கிந்தாகாண்டத்தில் (30.24.27) குறிப்பிடப்பட்டுள்ளது.

இசைமற்றும் நாட்டியம் தொடர்பாகபயன்படுத்தப்படும் சொற்கள் :

| | | |
|---|---|---|
| 1. சைலூச | : | ஒருகுறிப்பிட்டவகுப்பினர்,அரசவைப் பணிமகளிரின் நடனஆசிரியர். |
| 2. நட | : | தொழில் முறைநடிகர், |
| 3. நர்தகள் | : | தொழில் முறைநாட்டியகலைஞன் |

4. கணிகை : தொழில் முறைஅரசவையணங்கு, பாடுவதும், இசைப்பதும் முக்கியபணியபாகக் கொண்டபொதுமகள்.
5. பணிவாடர்கள் : முரசுஒளிப்பவர்கள்.
6. காயிகை : பெண் பாடகி,அயே. காண்டம் (6.16)
7. தாளபகரர்
8. காந்தர்வ : ஒத்துஊதுபவர்கள். பாணிவாடகருடன இணைந்துகருவியிசைப்பவர்கள், இசைசமயகாப்பாளர். தத்துவம்
9. நிருத்தம் : இசைமற்றும் நாட்டியவிதிகள்
மற்றும் கீதம் : இரண்டும் சேர்த்தேஅடிக்கடிகுறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நாடகம், நூபுரம் மற்றும் கிண்கிணி,தாளம், லயம்,யாழ்,வீணை,மார்கி,ரசம், மதூகம், மிருதங்கம், முரஜம், பனவம், பாடகம், பேரி, தந்துவிபோன்றவைகுறிப்பிடப்பட்டுள்ளன.

முடிவுரை :

இந்தியவரலாற்றின் அனைத்துக் காலக்கட்டங்களிலும் நாட்டியமும் இசையும் பிரசித்திப் பெற்றஒருகலையாகதிகழ்ந்துவந்துள்ளதுஎன்பதனைமேலே கூறப்பட்டுள்ளசெய்திகள் மூலம் நாம் அறியமுடிகிறது. இத்தகையஅடிப்படைகலையானதுஓர் இயக்கமாகஅமைந்துமனிதனுள் ஒருபிரதான தூண்டுதலாகவும் அனைத்து ஜீவராசிகளுக்குள்ளிலும் ஓர் உள்ளார்ந்தசக்தியாகவே இசையும்,நாட்டியமும் இயங்குகின்றது.

கம்பர் : கம்பராமாயணம்
ஊ.சு.ஸ்ரீநிவாஸயங்கார் : வால்மிகி இராமாயணம் (தமிழ் மொழிபெயர்) திலிட்டில் ப்ளவர் கம்பெனி,சென்னை
Prof.C.R. Krishnamury : Thamizh Literature through ages www.tamilnation.org
R.A.Padmanathan : V.V.S.AiyarsKamba Ramayanam www.tamilnation.org
ரா.இராகவையங்கார் : கவிச்சக்கரவர்த்திகம்பர்
R.K. Narayan : The ramayana - A Shortened Modern Prose Version of the Indian Epic in English.